பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 03 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரயில்வே துறையின் நிதி ஆதாரம் கடந்த **10** ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் உதயான் தோட்டத்தை இதுவரை **11** ஆயிரம் மூத்த குடிமக்கள் பார்வையிட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கத்தாரில் இருந்து **600** இந்தியர்கள், **5** விமானங்கள் மூலம் நேற்று இந்தியாவின் பல்வேறு நகரங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாக தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

4. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் பாதுகாப்புத்துறை தலைவர் **Ali Larijani** கொல்லப்பட்டதை அந்நாட்டு பாதுகாப்புக் கவுன்சில் உறுதி செய்துள்ளது.

5. ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் இணைவதற்கு பெரும்பாலான நேட்டோ நாடுகள் மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ரயில்வே துறையின் நிதி ஆதாரம் கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று வரும் நிதியாண்டுக்கான ரயில்வேதுறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், செயல்திறன் அடிப்படையிலான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாலேயே ரயில்வே உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் வளர்ச்சி எட்டப்பட்டு வருவதாக கூறினார்.

ரயில்வே துறையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றங்களை கொண்டு வந்திருப்பதாகவும், ரயில்வே துறைக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதால் நாட்டின் அனைத்து மாநிலங்களும் பலனடைந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

ரயில் வழித்தட மின்மயமாக்கல், டீசல் அடிப்படையிலான செயல்பாடுகளுக்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றால் கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே துறைக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைத்திருப்பதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

கத்தாரில் வான்வெளி கட்டுப்பாடுகள் நீடிக்கும் நிலையில் நேற்று ஆயிரத்து 600 இந்தியர்கள், கத்தார் ஏர்வேஸ்-ன் 5 விமானங்கள் மூலம் இந்தியா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கான விமானப் போக்குவரத்தை மேலும் விரிவுபடுத்தவும், 9 நகரங்களுக்கான இணைப்பை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தூதரக அறிக்கை தெரிவிக்கிறது.

கத்தார் வான்வெளி தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் கட்டுப்பாடுகள் உடனேயே விமானங்கள் இயக்கப்படுவதாகவும், தூதரகம் மூலம் இந்தியப் பயணிகள் தங்களின் பயணத்தை திட்டமிடுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சவுதி அரேபியாவுக்கு சென்று அங்கிருந்து இந்தியா திரும்ப ஏதுவாக தற்காலிக விசாவும் வழங்கப்படுவதாக தூதரக அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே மேற்காசியாவின் பல்வேறு நாடுகளிடமிருந்து ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் சார்பில் 50 விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட 26 விமானங்களுடன் மேலும் 24 விமானங்கள் இயக்கப்பட இருப்பதாக ஏர் இந்தியா வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 4 மாநிலங்கள், புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தலுக்கு ஆயிரத்து 111 மத்திய பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இவர்களில் 557 பேர் பொது பார்வையாளர்கள், 158 பேர் காவல்துறை பார்வையாளர்கள் மற்றும் 326 செலவினப் பார்வையாளர்கள் என்று தேர்தல் ஆணைய செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேர்தலை நேர்மையாகவும், வன்முறை ஏதும் நிகழாமலும் தடுக்கும் வகையில் நடத்துவதற்கு ஏதுவாக இந்தப் பார்வையாளர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பார்வையாளர்கள் தங்களுக்கான தொகுதிகளில் இன்று முதல் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் **100** சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கையெழுத்து இயக்கம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Vijayakumar — 42 Sec)**

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு. **Sheikh Mohamed Bin Zayed Al Nahyan** உடன் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

மேற்காசியாவில் தற்போதைய நிலவரம் குறித்தும், ஹோர்முஸ் நீரிணை பாதுகாப்பு குறித்தும் அப்போது அவர்கள் விவாதித்தனர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தமது கண்டனத்தை தெரிவித்ததாகவும், இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்திருப்பதுடன், அவர்களின் சொத்துகளும் சேதமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசிய பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை விரைந்து கொண்டுவர ஐக்கிய அரபு எமிரேட்சுடன் இணைந்து இந்தியா பணியாற்றும் என்றும் தாம் தெரிவித்ததாக அதில் பிரதமர் கூறியுள்ளார்.

மேலும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபருக்கு தமது ரம்ஸான் வாழ்த்துகளையும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள **Amrit Udhyan** தோட்டத்தை நேற்று வரை **11** ஆயிரம் மூத்த குடிமக்கள் பார்வையிட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குடியரசுத்தலைவர் மாளிகையின் தோட்ட அழகை மூத்த குடிமக்கள் பார்வையிடுவதற்கு மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த குடிமக்களின் நலன் மற்றும் அவர்களின் சமூக பங்களிப்பை மேம்படுத்தும் வகையிலும் இந்த முயற்சியை மத்திய அரசு எடுத்துள்ளது.

<<<<>>>>

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் பாதுகாப்புத்துறை தலைவர் Ali Larijani கொல்லப்பட்டதை அந்நாட்டின் பாதுகாப்பு கவுன்சில் உறுதிப்படுத்தியுள்ளது.

Larijani கொல்லப்பட்டதை இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு Israel Katz தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் இரவில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் Larijani உடன் அவரது மகன் Morteza Larijani, பாதுகாப்பு அலுவலக தலைவர் Alireza Bayat மற்றும் பாதுகாவலர்கள் கொல்லப்பட்டதாக ஈரான் பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் இணைவதற்கு பெரும்பாலான நேட்டோ நாடுகள் மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நேட்டோ கூட்டணி நாடுகளின் இந்த செயல்பாட்டை விமர்சித்த ட்ரம்ப், வெளிநாடுகளின் ஆதரவு அமெரிக்காவுக்கு தேவையில்லை என்று கூறினார்.

நேட்டோ நாடுகள் ஆதரவு அளிக்காவிட்டாலும் தங்களின் செயல்பாட்டை வேறு சில நாடுகள் உறுதியான ஆதரவை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஈரானின் ராணுவ திறன்களை அமெரிக்கப் படையினர் குறிப்பிடத்தக்க அளவுக்கு சீர்குலைத்திருப்பதாக தெரிவித்த அவர், இனிமேல் நட்பு நாடுகளின் ஆதரவு தேவையில்லை என்றார்.

இதனிடையே திரு. ட்ரம்ப் சீனாவுக்கு மேற்கொள்ள திட்டமிட்டிருந்த பயணம் மேலும் தாமதமாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத இறுதியில் தாம் சீனா செல்லவிருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவின் தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையத்தின் தலைவர் திரு. **Joe Kent** தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. ட்ரம்ப்புக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் அமெரிக்காவுக்கு ஈரான் எந்தவித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாதபோது, இஸ்ரேலிடமிருந்து வந்த நெருக்கடி காரணமாக இந்த் தாக்குதலை அமெரிக்கா தொடங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

என்றாலும் திரு. **Joe Kent**-ன் ராஜினாமா கடிதத்திற்கு வெள்ளை மாளிகை எந்த பதிலையும் அளிக்கவில்லை.

<<<<>>>>

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அருகே நேற்று அடுத்தடுத்து ட்ரோன் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஈரானுக்கு எதிரான தாக்குதல் நீடித்து வரும் நிலையில் அந்நாட்டு எல்லையை ஒட்டியுள்ள பாக்தாத் அமெரிக்க தூதரகம் அருகே **3** வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

எந்த வயதில் குழந்தைகளை தத்தெடுத்தாலும், பெண்களுக்கு **12** வார மகப்பேறு விடுப்பு பெற தகுதி உள்ளது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மூன்று வயதுக்கு குறைவான குழந்தைகளை தத்தெடுக்கும் பெண்களுக்கு மட்டுமே மகப்பேறு விடுப்பு வழங்க வகை செய்யும் சமூக பாதுகாப்பு சட்ட விதியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் நீதிபதிகள் திரு. **Pardiwala,** திரு. மகாதேவன் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை வெளியிட்டது.

<<<<>>>>

**Orleans Masters** பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Aakarshi Kashyap** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**